எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் 36

அநீதிக்கு எதிரான நீதியின் குரல்!
அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு
குறித்த வரலாற்றைப் பேசும்
எல்லோருக்கும் எல்லாம்!

இடஒதுக்கீட்டுக் கொள்கையில், தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்வதற்கு முக்கியக் காரணம், அக்கொள்கையை வீரியத்துடனும், தீரத்துடனும் முன்னெடுத்த முன்னணிக் கொள்கையாளர்களின் பங்களிப்பு. அவ்வகையில், முதலாமவரான **சர் பிட்டி தியாகராயரின்** பங்களிப்பை இக்கட்டுரையில் நினைவுகூர்வோம்.

சென்னை, வணிகக் குடும்பத்தில் பிறந்த சர் பிட்டி தியாகராயர், சென்னை மாநிலக் கல்லூரியில் பி.ஏ. பட்டம் பெற்றார். வணிகத்தில் சிறந்து விளங்கிய பிட்டி தியாகராயர் அரசியல் துறையிலும் சேவை செய்து புகழ்பெற்றார். தொடக்கக் காலத்தில் காங்கிரஸ் கட்சியில் இணைந்து பணியாற்றினார். இருப்பினும், அக்கட்சி பார்ப்பன வகுப்பாரின் நலனை மட்டுமே, நோக்கமாகக் கொண்டு இயங்கி வருவதைக் கண்டித்தார்.

‘அரசியல், கல்வி, அரசு நிர்வாகம் உள்ளிட்ட துறைகளில் பார்ப்பனரல்லாதாருக்கு உரிய பங்கினை அளிக்கவேண்டியது காங்கிரசின் கடமை’ என்று வலியுறுத்தினார். ஆனால், தியாகராயரின் உரிமைக் குரல்களை பார்ப்பன ஆதிக்கத்தில் மூழ்கித் திளைத்த காங்கிரஸ் கட்சி மதிக்கவில்லை.

பார்ப்பன ஆதிக்கத்திற்கு முடிவு கட்ட விரும்பிய தியாகராயரையும், டாக்டர் டி.எம்.நாயரையும் டாக்டர் நடேச முதலியார் ஒருங்கிணைத்தார். பார்ப்பனரல்லாதார் உரிமைகளை மீட்கும் நோக்குடன், தென்னிந்திய நலஉரிமைச் சங்கம் பிறந்தது. பார்ப்பனரல்லாதாரின் உரிமைக் குரலாக வரலாற்றில் நீங்கா இடம் பிடித்துவிட்ட, பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கை, பிட்டி தியாகராயரின் கையெழுத்துடன் வெளியானது.

உரிய பிரதிநிதித்துவம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் செய்யப்படவேண்டிய மாற்றங்களை முடிவு செய்ய, வைசிராய் செம்ஸ்போர்டு, இந்தியாவுக்கான உள்துறைச் செயலர் மாண்டேகு ஆகியோர் சென்னை வந்தனர். அவர்களை 17.12.1917 அன்று சந்தித்த, பிட்டி தியாகராயர் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் அறிக்கையை அளித்தார். நிர்வாகத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் அனைத்துச் சமூகங்களுக்கும் உரிய பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும், அனைத்துச் சமூகங்களுக்கும் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில், இந்தியச் சட்டமன்றங்களை விரிவாக்க வேண்டும், அன்று செயலில் இருந்த மறைமுகத் தேர்தலுக்குப் பதிலாக, மக்கள் பிரதிநிதிகளை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் வகையில், சமூக அடிப்படையில் வாக்குரிமையை விரிவுபடுத்தவேண்டும் என்றும் அவ்வறிக்கை கோரியது.

சென்னை மாகாணத்தில், பல இடங்களில் பார்ப்பனரல்லாதாரின் வகுப்புரிமை, தனித்தொகுதி ஆகியவற்றின் அவசியத்தை விளக்கி, மாநாடுகளைக் கூட்டிய நீதிக்கட்சித் தலைவர்கள் பார்ப்பனரல்லாத மக்களிடம் எழுச்சி ஊட்டினர். கோயம்புத்தூரில் நடைபெற்ற **பார்ப்பனரல்லாதார் மாநாடு**, விஜயவாடாவில் நடைபெற்ற **தெலுங்குத் தலைவர்கள் மாநாடு**, திருநெல்வேலியில் நடைபெற்ற **தமிழ்த் தலைவர்கள் மாநாடு**, பிக்காவோலில் நடைபெற்ற **‘கோதாவரி பார்ப்பனரல்லாதார் மாநாடு’** உள்ளிட்ட பல்வேறு மாநாடுகளில் கலந்துகொண்ட தியாகராயர் பார்ப்பனரல்லாதாரின் வகுப்புரிமைக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்தார்.

● சர் பிட்டி தியாகராயர்

பார்ப்பனரல்லாதோரை உயிர்ப்பித்த பேராற்றல்!

மாண்டேகு - செம்ஸ்போர்டு குழு

எழுந்து நின்று பேச முடியாத அளவு உடல்நலன் குன்றியிருந்தாலும், பிட்டி தியாகராயர் 1917-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28, 29-ஆம் தேதிகளில் சென்னையில் நடைபெற்ற நீதிக்கட்சியின் முதல் மாநாட்டில் கலந்துகொண்டார். சட்டமன்றங்களில் எல்லோருக்கும் சரிசமமான பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டும், எல்லாச் சமூகங்களும் உரிமை பெறும் வகையில் வகுப்புவாரி உரிமை வழங்கவேண்டும் என்பது உள்ளிட்ட பார்ப்பனரல்லாதாரின் உரிமைகளை முன்வைத்த, தியாகராயரின் வரவேற்புரையை திருமலைப் பிள்ளை வாசித்தார். நீண்டகால நோக்கில் பார்ப்பனரல்லாதாரின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் வகுப்புவாரி உரிமையையும், தனித்தொகுதி உரிமையையும் வென்றெடுப்பதே இம்மாநாடுகளின் மைய நோக்கமாக அமைந்தது.

இந்தியாவின் பல்வேறு குழுக்களைச் சந்தித்து, அவர்களின் கோரிக்கைகளைப் பெற்றுக்கொண்ட மாண்டேகு - செம்ஸ்போர்டு 08.07.1918 அன்று கூட்டறிக்கை வெளியிட்டனர்.

முஸ்லிம்களுக்கும், சீக்கியர்களுக்கும் தனித்தொகுதிகளைப் பரிந்துரை செய்த மாண்டேகு - செம்ஸ்போர்டு, சென்னை மாகாணத்தில் பெரும்பான்மையினராக இருக்கும் பார்ப்பனரல்லாத வகுப்பினருக்குத் தனித்தொகுதி தேவையில்லை என்று அவர்கள் கருதினர். இருப்பினும், யாருக்கு எவ்வாறு வாக்குரிமை வழங்கலாம் என்பதைத் தீர்மானிக்க, சவுத் ப்ரோ பிரபு தலைமையில், வாக்குரிமைக் கமிட்டியை (Franchise Committee) உருவாக்கினர்.

“தியாகராயர் திராவிடர்களுக்குத் தன்னுணர்வையும் தன்மானத்தையும் உண்டாக்க விரும்பினார்” என்று பேரறிஞர் அண்ணா புகழ்ந்தார். அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வோம்.

தென்னிந்திய நல உரிமைச் சங்கம் மாண்டேகு - செம்ஸ்போர்டு அறிக்கையை வரவேற்றாலும், பார்ப்பனரல்லாதார்களுக்குத் தனி வகுப்புரிமை வழங்கப்படாததால் ஏமாற்றமடைந்தது. மாண்டேகு - செம்ஸ்போர்டு குழு பார்ப்பனரல்லாதாருக்குத் தீமை இழைத்து விட்டதாகக் கருதியது. வாக்குரிமையைத் தீர்மானிக்க நியமிக்கப்பட்ட குழுவில் வகுப்புரிமைக் கோரிக்கையைத் தொடர்ந்து எதிர்த்து வந்த, வி.எஸ்.சீனிவாச சாஸ்திரியும், சுரேந்திரநாத் பானர்ஜியும் சேர்க்கப்பட்டிருந்தனர். இவர்களின் நியமனத்தை எதிர்த்து, பல்வேறு கண்டனக் கூட்டங்களைக் கூட்டிய நீதிக்கட்சி, அவர்களை வாக்குரிமைக் குழுவிலிருந்து நீக்கும்படி தீர்மானம் நிறைவேற்றியது. அவ்வாறு நீக்காவிட்டால், வாக்குரிமைக் குழுவிடம் சாட்சியம் அளிக்கமுடியாது என்று முடிவெடுத்தது.

எதிர்ப்புகளுக்கு வைசிராய் செவி சாய்க்கவில்லை. வாக்குரிமைக் குழு பல்வேறு அமைப்புகளை அழைத்து சாட்சியம் பெற்றது. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தையும் அழைத்தது. தம்முடைய நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாத வாக்குரிமைக் குழுவின் அழைப்பைப் புறக்கணிக்க நீதிக்கட்சி முடிவு செய்தது. அதன்படி, தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இணைத்து, வாக்குரிமைக் குழுவிடம் சாட்சியம் அளிக்கவியலாது என்று, சென்னை மாகாண அரசுக்கு 12.1.1919 அன்று தியாகராயர் கடிதம் அனுப்பினார்.

மாண்டேகு-செம்ஸ்போர்டு அறிக்கை குறித்து விவாதிப்பதற்காக, தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் சிறப்பு மாநாடு 20-10-1918 அன்று சென்னையில் கூடியது. இம்மாநாட்டுக்குத் தலைமை வகித்த தியாகராயர், பார்ப்பனரல்லாதாரின் உரிமைக் குரல்களுக்குச் செவிசாய்க்காத ஆங்கிலேய அரசை மிகக் கடுமையாகக் கண்டித்து, உரையாற்றினார்.

அவ்வுரையில், “மாண்டேகு - செம்ஸ்போர்டு அறிக்கை கூறுவது போல், வகுப்புரிமை இந்தியர்களின் சுதந்திர ஆட்சி முறைக்கு எதிரானதாக அமையுமெனில், முஸ்லிம்களுக்கும், சீக்கியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள வகுப்புவாரி வாக்குரிமை ஏன் வழங்கப்பட்டது, சென்னை மாகாணத்தில் பார்ப்பனரல்லாதார் பெரும்பான்மையினராக இருப்பதைப் போன்றே, அவர்களும் பல மாநிலங்களில் பெரும்பான்மையினராக உள்ளனர்” என்று குறிப்பிட்டு, மாண்டேகு - செம்ஸ்போர்டுவின் இரட்டை நிலைப்பாட்டைச் சுட்டிக்காட்டினார்.

பார்ப்பனரல்லாதாரின் வகுப்புரிமை நிலைநாட்டப்படாவிட்டால், சமூகத்தில் உள்ள வேற்றுமைகள் நிரந்தரமாக நிலைபெறும் என்று கருதிய தியாகராயர், வகுப்புவாரி வாக்குரிமைக்குக் குறைந்த எதையும் ஏற்க மறுத்தார். பார்ப்பனரல்லாத சமூகத்தின் விருப்பத்தை உணர்ந்து அதற்கேற்ற வகையில், அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்பதில், உறுதியாக இருந்த அவர் அதற்காக இங்கிலாந்து சென்று குரல் எழுப்பவேண்டும், என்றும் முடிவெடுத்தார்.

தியாகராயரும் நீதிக்கட்சியும் கோரியபடி வகுப்புவாரி வாக்குரிமை கிடைக்காவிடினும், மாண்டேகு-செம்ஸ்போர்டு அறிக்கைக்குப் பின்னர் ஏற்பட்ட அரசியலமைப்பு மாற்றங்களின்படி, 1920-இல் சென்னை மாகாணத்தில் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி வென்றது.

நீதிக்கட்சி ஆட்சி

நீதிக்கட்சித் தலைவரான தியாகராயரை சென்னை மாகாண கவர்னர் வெலிங்டன் பிரபு ஆட்சி அமைக்க அழைத்தார். சென்னை மாகாண முதலமைச்சர் பதவியை ஏற்க மறுத்த தியாகராயர், சுப்பராயலு ரெட்டியாரை முதலமைச்சராக நியமிக்கப் பரிந்துரைத்தார். நீதிக்கட்சி ஆட்சி, தமிழ்நாட்டின் வரலாற்றைத் திருத்தி எழுதியது. அதற்கு அடிகோலிய தியாகராயரின் மறைவின்போது (28.04.1925) “உறங்கிக் கிடந்த பார்ப்பனரல்லாதார்களை உயிர்ப்பிக்கச் செய்த பேராற்றல்” என்று தந்தை பெரியார் (குடி அரசு 2.5.1925) அவருக்குப் புகழாரம் சூட்டினார்.

“தியாகராயர் திராவிடர்களுக்குத் தன்னுணர்வையும் தன்மானத்தையும் உண்டாக்க விரும்பினார்” என்று பேரறிஞர் அண்ணா புகழ்ந்தார். அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வோம்.

...குரல் ஒலிக்கும்

‘அக்கினிப் பரீட்சை’ முன் வெளியீட்டுத் திட்டம்!



‘சோ’வியத் ரஷ்யா’ மானுடச் சமூகத்தின் ஒரு மகத்தான கனவு. முதலாளிகள் இல்லாத ஒரு சமுதாயத்தை உருவாக்க நினைத்த, லெனின் அவர்களின் மகத்தான முயற்சி. முதலாம் உலகப் போர், இரண்டாம் உலகப் போர் என்ற முதலாளித்துவ சண்டைகளின் நடுவே உருவானது, சோவியத் ஒன்றியம்.

உழைக்கும் மக்கள் ஒருபுறமும், முதலாளித்துவ சக்திகள் மறுபுறமும் நின்று நடத்திய யுத்தத்தின் ரத்த சாட்சியாக இருக்கும் நூல் ‘அக்கினிப் பரீட்சை’. சோவியத் ரஷ்யா எப்படி உருவானது என்பதை, நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தும், இந்த மாபெரும் படைப்பு.

அலெக்சேய் தவ்ஸ்தோய் எழுதிய, சேறும் சகதியும் பனியும் வியர்வையும் கண்ணீரும் கலந்த இந்தக் காவியத்தை, சுமார் 50 ஆண்டுகளுக்குப் பிறகு , கெட்டி அட்டையுடன் செம்பதிப்பாக வெளியிடுகிறது, மின்னங்காடி பதிப்பகம்.

2,400 பக்கங்களுடன் மூன்று பாகங்களாக, 2,500 ரூபாய் விலையில் வெளிவரும் இந்த நூலை, முன் வெளியீட்டு விலையாக 2,000 ரூபாய்க்கு அளிக்கிறது. ஜனவரி ஒன்றாம் தேதி நூல்கள் கிடைக்கும். முகவரியும் பணமும் அனுப்புவதற்கு, வாட்ஸ் அப்பில் 72992-41264 இந்த எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

:ப்ளாஷ்பேக்

தளபதி அணிவித்த பொன்னாடை!

எம்.ஏ.ரகீம்

1980-ஆம் ஆண்டில், கழகத்தின் இளைஞர் அணி தொடங்கப்பட்ட பின்னர், 1983-ஆம் ஆண்டிலிருந்து இளைஞர் அணி கட்டமைப்பு மாவட்ட அளவிலும் பலப்படுத்தப்பட்டது.நீலகிரி மாவட்டத்தில், இளைஞர் அணி அமைப்பாளராக பா.முபாரக் அவர்கள் (இன்றைய தி.மு.க. மாவட்டச் செயலாளர்) தேர்வு செய்யப்பட்டார். அவரை அறிமுகம் செய்து வைக்கும் கூட்டம், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் தலைமையில், குன்னூர் விநாயகர் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது. அப்போது, அமைப்புப் பணியில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக, தளபதி அவர்கள் எனக்கு பொன்னாடை அணிவித்தார்.

- எம்.ஏ.ரகீம், 17-வது வார்டு கிளைச் செயலாளர், கிருஷ்ணாபுரம், குன்னூர் நகரம், நீலகிரி மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

கருவூலம்

தமிழ்நாடு கனவு!

1969-ஆம் ஆண்டு, தாய்த் தமிழ்நிலத்திற்கு ‘தமிழ்நாடு’ எனப் பெயர் சூட்டி, நூற்றாண்டுக் கனவை நிறைவேற்றினார், பேரறிஞர் அண்ணா. நாடாளுமன்றத்தில், முன்னர் தனித் தீர்மானம் கொண்டு வரப்பட்டாலும், அப்போது, அது நிறைவேறவில்லை. ஆனால், தான் முதலமைச்சராக ஆனதும், பெயர் மாற்றத்தை நிறைவேற்றி, தமிழர்களின் தனித்த அடையாளத்தை நிலை நிறுத்தினார், அண்ணா.

திராவிடத்தால் வாழ்கிறோம்

651

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்



-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131